விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 191 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 14 செவ்வாய்க்கிழமை (28.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## எரிபொருள் இல்லை
# நாடு சுயமாகவே முடங்குகின்றது

(கொழும்பு)

**எரிபொருள் இன்மை காரணமாக நாடு சுயமாகவே முடங்கும் அபாய நிலை உருவாகியுள்ளது.**

**எரிபொருள் நெருக்கடி காரணமாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.**

தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் ஒக்டேன் 95 வகை பெற்றோல், 3 ஆயிரம் மெட்ரிக் தொன் மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கையிருப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வெளியிடப்பட்டாலும், அடுத்த மூன்று நாட்களுக்கு மட்டுமே அது போதுமானதாக இருக்குமென இலங்கை 15

## தொடர்ந்து உதவுவோம்
### அமெரிக்க உயர்மட்டக்குழு ஜனாதிபதியிடம் உறுதி



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு தொடர்ந்து உதவுவோம் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க உயர்மட்டக் குழு 15

## யாழில் எரிபொருள் விநியோகம் தொடர்பாக
### பிரதேச செயலாளர்கள், பொலிஸார், இராணுவத்தினர் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட எரிபொருள் விநியோகம் தொடர்பாக பிரதேச செயலாளர்கள், பொலிஸார்மற்றும் இராணுவ 15

## வடமராட்சியில்
# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பருத்தித்துறை கிராமக்கோட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று குழப்ப நிலை ஏற்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து எரிபொருள் விநியோகம் இடை 15

## அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே
# எரிபொருள் விநியோகம்
### ஜூலை 10 வரை நடைமுறை



(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் இன்று முதல் ஜூலை 10 ஆம் திகதி வரை எரிபொருள் விநியோகிப்பதற்கு தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை விடுமுறை குறித்து அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு வலயம், மேல் மாகாணத்தின் புறநகர்ப் பகுதிகள் மற்றும் அனைத்து மாகாணங்களின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் ஜூலை 10ஆம் திகதி வரை மூடப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலை 15

# கையிருப்பில் உள்ள பணத்தைக் கொண்டு எரிபொருளை இறக்குமதி செய்க
### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



(கொழும்பு)

கையிருப்பில் உள்ள பணத்தைக் கொண்டு எரிபொருளை இறக்குமதி செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டா பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு நீண்டகாலமாக எரிபொருளை இறக்குமதி 15

## எரிபொருளைப் பெற்றுக்கொள்ள
### கட்டார் பயணமாகிறார் எரிசக்தி அமைச்சர்?

(கொழும்பு)

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கட்டார் 15



சமூக ஊடகங்களில் அதிகமாக பகிரப்பட்ட புகைப்படம்

## புகையிரத சேவைகள் வழமைபோல் இடம்பெறும்

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், புகையிரத சேவைகள் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, புகையிரத சேவைகள் வழமை போல முன்னெடுக்கப்படும் என புகையிரத திணைக்களம் 15

## மின் கட்டணத்தை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டிற்கான மின்சாரக் கட்டணங்களை 82% அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை (CEB) இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் (PUCSL) அனுமதியை கோரியுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## போதையுடன் இருவர் கைது

ஓட்டமாவடியில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஓட்டமாவடி மற்றும் மாவடிச் சேனை பிரதேசத்தை சேர்ந்த 44, 41 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டனர்..

இவர்களிடம் இருந்து 30 கிராம் ஐஸ் போதைப்பொருள் அவர்களின் வீடுகளில் வைத்து விற்பனைக்கு தயார்படுத்தப் பட்டபோது கைது செய்யப்பட்டனர். (ம-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 17 08 1947

இறப்பு 29 05 2022

அமரர் திருமதி

### தவச்செல்வம் சிவமணி

கடந்த 29.05.2022 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று திங்கட்கிழமை (27.06.2022) அதிகாலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

இன்று செவ்வாய்க்கிழமை (28.06.2022) எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மந்திகை,
புலோலி தெற்கு, புலோலி. (C-4548)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### ஶ்ரீமதி பாலசுப்பிரமணியக் குருக்கள் கௌரீஸ்வரி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ்.வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதம குரு அமரர் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் அவர்தம் பாரியார் கௌரீஸ்வரி நேற்று (27.06.2022) இறைபதம் அடைந்தார்.

அன்னார் சங்கானை அமரர் நாகேஸ்வரசர்மா - சுலோசனாம்பாள் அவர்களின் அன்பு மகளும் அமரர் கண்டி நாகேந்திரக்குருக்கள் - அமிர்தாம்பிகை அம்மா அவர்களின் அன்பு மருமகளும் அமரர் பாலசுப்பிரமணியக் குருக்களின் பாசமிகு மனைவியும் ஸ்கந்தரூபக்குருக்கள் (காரைநகர்), சாந்தஸ்வரூபி, ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் (கொழும்பு), அஜந்தரூபி, ஜெயந்தரூபி, அமரர் சாந்தஸ்வரூபக்குருக்கள், பாலகணேசக்குருக்கள் (கந்தர் மடம்), பாலமயூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் யசோதா, மங்களேஸ்வரக்குருக்கள் (அரியாலை), கிருஸ்ணவேணி, ஜெயபாலக்குருக்கள் (நல்லூர்), மாரீஸ்வரக்குருக்கள் (கன்னாதிட்டி), பாலேஸ்வரி, யுகராஜக் குருக்கள் (புத்தூர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பாலகௌரி, கஜலக்ஷி, சுந்தரேஸ்வரமணிகண்டசர்மா, சுப்ரசாந்தி, சாந்தஸ்வரூபசர்மா, சாந்தஸ்வரூபினி, ஸ்ரீநாகேந்திரசர்மா, பாலேஸ்வரி, சிவசங்கவி, பிரஹதீஸ்வரசர்மா, பிரதாபசர்மா, சபரிகீர்த்தனா, சபரிகீர்த்திகா, பாலசுப்பிரமணிய சர்மா, சபரீஸசர்மா, சதுஸ்டிகா, நிவாஸசர்மா, ஸ்ரீசிவசங்கரி, மயூரிகா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (29.06.2022) புதன்கிழமை நடைபெற்று காலை 8 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆலய பரிபாலனர்களுக்கு அறியத் தருகின்றோம்.

48, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (12003)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 076 466 0685, 077 639 1055

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



29.05.2022 இறைபதம் அடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் சுப்பிரமணியம் புவனேஸ்வரி

தோற்றம்:-08.09.1954 மறைவு: 29.05.2022

எங்கள் குடும்ப குலவிளக்கே அம்மா
எங்கள் நெஞ்சறைக் கூட்டில் அழியா ஓவியம் நீங்கள்
உங்களை நினைத்து நெஞ்சம் துடிப்பதென்ன
ஒருமுறை உன் அன்பு முகம் கான
ஓடோடி வரமாட்டாயோ இங்கு

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (27.06.2022) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரை அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றது.
இன்று (28.06.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் மதியம் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வி.எம்.வீதி,
பருத்தித்துறை. (12008)

உன் நினைவுகளுடன் தவிக்கும்:- குடும்பத்தினர்
077 669 1803, 076 947 4169

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சிறப்பு முகாம்களில் வாடும் ஈழத்தமிழர்களை விடுதலை செய்யுங்கள்

## தமிழக முதல்வரிடம் பழ.நெடுமாறன் வேண்டுகோள்

(சென்னை)

**விடுதலைப்புலிகள் மீதான தடை ஐரோப்பிய நாடுகளில் விலக்கப்பட்டு விட்டது. இந்தியாவில் மட்டுமே இத்தடையை நீடிக்கிறது. விடுதலைப் புலிகள் என குற்றம் சாட்டி இந்திய சிறப்பு முகாம்களில் வாடும் ஈழத்து இளைஞர்களை விடுதலை செய்யுமாறு தமிழக முதலமைச்சரிடம் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழ் நாட்டில் அடைக்கலம் புகுந்த ஈழத்தமிழ் இளைஞர்கள் பலரை விடுதலைப்புலிகள் என குற்றம் சாட்டி வழக்குகள் தொடுக்கப்பட்டு திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழ் இளைஞர்கள் பொய்க் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்படுவதும் சிறைகளுக்குப்பதில் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு ஆண்டுக்கணக்கில் வாடுவதும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்திய அரசால் தடைவிதிக்கப்பட்ட பிறகு இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை அதற்கென அமைக்கப்படும் சிறப்பு நீதிமன்றம் விசாரணை நடத்தி அந்தத் தடையை மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தடையை நீடிப்பதற்காக ஈழத் தமிழ் இளைஞர்களை பொய் வழக்குகளின்கீழ் தமிழக கியூ பிரிவு பொலிஸார் கைது செய்து சிறையில் வைப்பதும், சிறப்பு நீதிமன்றம் இதையே காரணமாகக் காட்டி தடையை நீடிப்பதும் வாடிக்கையாக நடைபெற்று வருகிறது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் போர் முடிந்து விடுதலைப்புலிகளை முற்றிலுமாக ஒழித்துவிட்டதாக சிங்கள அரசு அறிவித்து விட்டது.

ஐரோப்பிய நாடுகளில் இந்த இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடை விலக்கப்பட்டு விட்டது. இந்தியாவில் மட்டுமே இந்த தடை இன்னமும் நீடிக்கிறது.

இந்தியாவில் செயற்படாத தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தைக் காட்டி வழக்குகள் தொடுக்கப்பட்டு சிறப்பு முகாம்களில் ஈழத் தமிழ் இளைஞர்கள் அடைக்கப்பட்டுள்ள அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வருமாறும், சிறப்பு முகாம்களில் பல்லாண்டு காலமாக அடைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறும் தமிழக முதல்வரை வேண்டிக் கொள்கிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட 54 பேர் மட்டக்களப்பில் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முற்பட்ட 54 பேர் மட்டக்களப்பு - பாலமீன்மடு கடற்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் அவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதானவர்களை திருகோணமலை - துறைமுகத்திற்கு அழைத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த சுமார் 100 பேர் அவுஸ்திரேலிய அரசால் .நாடு கடத்தப்பட்டுள்ள அதேவேளை, அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் செல்வதற்கு முற்பட்ட 400 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## எரிபொருள் நெருக்கடி

# பிரசவவலி உச்சமடையும் வரை காத்திருக்க வேண்டாம்

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டு பிரச்சினை காரணமாக, பிரசவவலி உச்சமடையும் வரையில் காத்திருக்க வேண்டாம் என கர்ப்பிணித் தாய்மார்களிடம் மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எரிபொருள் பிரச்சினையினால் தாய் ஒருவர் நேற்று முன்தினம் தனது மூன்றாவது குழந்தையை வீட்டிலேயே பிரசவித்த சம்பவமொன்று நிக்கவரட்டிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.



எனவே பிரசவவலி ஏற்படும் அறிகுறிகள் தென்படும் போதே மருத்துவமனைகளில் சேர்வதற்கு கர்ப்பிணித்தாய்மார்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நாட்டை பொறுப்பேற்க நாங்கள் தயார்- சஜித்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு உடனடியாக சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு அரசாங்கத்திற்கு சவால் விடுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய புதிய கொள்கைகளின் கீழ் நாட்டைப் பொறுப்பேற்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்கவை சந்திக்க வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்ற போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "இந்த நாட்டை அழிக்கும் அரசாங்கத்தை ஜனநாயக ரீதியில் அகற்றுவதற்கான தேசிய பிரசாரத்தை நாங்கள் செயற்படுத்தி வருகிறோம்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அனுமதிக்குமாறு உங்கள் அனைவருக்கும் நாங்கள் சவால் விடுகிறோம். வாக்கெடுப்புக்கு உடனடியாக வாய்ப்பு கொடுங்கள்.

அப்போது நாட்டின் பிரச்சினைகளை தீர்க்கும் சிறந்த அணி எது என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள்.

புதிய ஆணையில் நாட்டை ஆளுமாறு மக்களைக் கேட்பதே எங்களின் பணி. நாட்டை, பொறுப்பேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என தெரிவித்துள்ளார். (நி)

# படகு மூலம் இந்தியா சென்ற வயோதிபத் தம்பதியர் மயங்கிய நிலையில் மீட்பு

(சென்னை)

இலங்கையில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி சென்ற வயதான தம்பதியர் கடற்கரையில் மயங்கிக் கிடந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.



இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையிலும் 85 இற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்நிலையில் திருகோணமலையில் இருந்து படகு மூலம் வயதான தம்பதியர் நேற்று அதிகாலை இராமேஸ்வரம் அருகே உள்ள தனுஷ்கோடி கடற்கரையில் வந்து இறங்கினர்.

இவர்கள் இருவரும் மயக்க நிலையில் கடற்கரையில் விழுந்து இருந்த நிலையில் அங்கு வந்த கடலோர பொலிஸார், அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை இடம்பெற்றுவரும் நிலையில் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர்லாந்துக்கு எதிரான இருபது -20 போட்டியில் இந்தியாவுக்கு வெற்றி



மழையினால் மூன்றரை மணி நேரம் தடைப்பட்டு 12 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்ட முதலாவது சர்வதேச இருபது- 20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியுடன் இரண்டு போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது- 20 கிரிக்கெட் தொடரில் இந்தியா 1 - 0 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலை அடைந்துள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 4 ஆவது ஓவரில் மொத்த எண்ணிக்கை 22 ஓட்டங்களாக இருந்தபோது 3ஆவது விக்கெட்டை இழந்த அயர்லாந்து பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

ஆனால், ஹெரி டெக்டர், லோர்க்கன் டக்கர் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 29 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

தொடர்ந்து ஹெரி டெக்டரும் ஜோர்ஜ் டொக்ரெலும் பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டில் 20 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஹெரி டெக்டர் 33 பந்துகளில் 6 பவுண்டறிகள், 3 சிக்ஸ்கள் அடங்கலாக 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இறுதியில் 4 விக்கெட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களை பெற்றது அயர்லாந்து அணி.

109 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா 9.2 ஓவர்களில் 3 விக் கெட்டுகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

தீப்பக் ஹூடாவுடன் இணைந்த அணித் தலைவர் ஹார்திக் பாண்டியா 3 ஆவது விக்கெட்டில் 31 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றி இலக்கை அண்மிக்க செய்தனர்.

இரண்டு அணிகளுக்கு இடையிலான 2ஆவதும் கடைசியுமான சர்வதேச இருபது- 20 கிரிக்கெட் போட்டி இன்று இடம் பெறவுள்ளது. (6)

# இங்கிலாந்து சென்றுள்ள ரோகித் சர்மாவுக்கு கொரோனா



கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி இங்கிலாந்து சென்றுள்ளது. இங்கிலாந்தின் லீசெஸ்டயர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இந்திய வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், கப்டன் ரோகித் சர்மா கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட ரேபிட் கொரோனா பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து ஹோட்டலில் அவர், தனிமைபடுத்தப்பட்டுள்ளதாகவும், மருத்துவக் குழுவின் கண்காணிப்பில் அவர் உள்ளதாகவும் பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளது.

ஜூலை முதலாம் திகதி இங்கிலாந்து அணியுடன், இந்திய அணி பங்கேற்கும் கடைசி டெஸ்ட் போட்டி தொடங்க உள்ள நிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள ரோகித் சர்மா இதில் பங்கேற்க மாட்டார் என தெரிகிறது. முன்னதாக மாலைதீவு சென்று விட்டு திரும்பிய விராட் கோலிக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டதாக தகவல் வெளியாகின. ஆனால் அவர் தற்போது குணமடைந்து விட்டதாக கூறப்படுகிறது. (4)


# மரண அறிவித்தல்



## சுந்தரலிங்கம் பாரததாதேவி

**மலர்வு : 1945.01.08 உதிர்வு : 26.06.2022**

வதிரி 'தேவி இல்லம்' பத்தியவத்தையைப் பிறப்பிடமாகவும் சுவிஸில் உள்ள KAFERHOL ZSTRASSE 101 8046 Zurich oerlikon (Buch eggplatz) வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் பாரததாதேவி சுவிஸ்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - சந்தனம் தம்பதியரின் அன்பு மகளும் சின்னக்கண்டு சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி செல்வநாயகம் சுபா, சு.சுபாஸ் (சுவிஸ்), சு.அருந்தவராசா, வை. சுனேக்கா (சுவிஸ்), சு.சுகன்ஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாயகம், சு. பிருந்தா, ப.வைகுந்தன், சுதர்சன், அ.அபிராமி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஐ.கமலாசினிதேவி, ஆ.அருணகிரிராஜா, ஆ.அரியராஜா, சி.சந்திராதேவி, தே.ராதாதேவி, அ. அன்னராசா, காலஞ்சென்ற ஆ.அருந்தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் செ.ஆஷாஸ், செ.அபிசேக், செ.அட்சயா, வை.அபிசாரன், வை.அபிசாளினி, சு.சுகன்சிகா, சு.தபிட்சன், சு.சுஜாத், சு.சுகன், அ.தேவிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்வு சுவிஸில் சுவிஸ் நேரப்படி 8.00 மணி தொடக்கம் 01 மணி வரை இடம்பெறும்.

வதிரி 'தேவி இல்லம்' பத்தியவத்தையில் மதியம் 01 மணிக்கும் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4549)

077 644 5434
சுபாஸ் (சுவிஸ்) - 0041791762448
சுந்தரலிங்கம் - 0041797863226

தகவல் :- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் வைரஸின் புதிய திரிபு

# 63 நாடுக்ளில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**கொவிட் வைரஸின் புதிய திரிபு 63 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**

இதேவேளை, புதிய வைரஸ் திரிபு இலங்கையில் இதுவரை கண்டறியப் படவில்லை என மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

BA 5 என்று பெயரிடப்பட்ட இந்த புதிய வைரஸை மிகுந்த அவதானத்துடன் பரிசோதித்து வருவதாக தெரிவித்துள்ள மருத்துவர் சந்திம ஜீவந்தர, இந்த புதிய வைரஸ் 63 நாடுகளில் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வைரஸ் ஏனைய வைரஸ்களை விட வேகமாகப் பரவுகிறது என்றும், முந்தைய கொவிட்-19 வைரஸின் திரிபுகளை விட அதிகமாகப் பரவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# அரசிற்கெதிராக மீண்டும் மக்கள் வீதிக்கிறங்குவர்

## பொதுஜன பெரமுன உறுப்பினர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்கள் எதிர்க்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிடின் மக்கள் அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மீண்டும் வீதிக்கிறங்குவார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் தொழிற்துறை தரப்பினருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்திடம் கிடையாது.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்கு மாறு பல தரப்பினர் முன்வைத்த யோசனைகளை தவறாக விளங்கிக் கொண்டமை அரசாங்கத்தின் தோல்விக்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது.

நாட்டின் பிரச்சினை தொடர்பில் பிரதமர், அமைச்சர்கள் உட்பட அரசாங்கத்தின் முக்கிய தரப்பினர் எவரும் கருத்துரைப்பதில்லை.

ஜனாதிபதியும் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதில்லை. பிரச்சினைக்கு தீர்வு காண அவதானம் செலுத்தாமல் இருந்தால் நாட்டு மக்கள் மீண்டும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வீதிக்கிறங்குவார்கள்.

பாராளுமன்றில் ஸ்திரமான பலமில்லாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டு நலனை கருத்திற்கொண்டு முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் என்பதை குறிப்பிட்டுள்ளோம்.

ஸ்ரீ லங்கன் விமான சேவை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நட்டமடையும் அரச நிறுவனங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என அரசாங்கம் குறிப்பிட்டாலும் அது குறித்து அவதானம் செலுத்தப்படவில்லை.

எரிபொருள், எரிவாயு விநியோகத்தில் காணப்படும் சிக்கல் நிலைமை, மின்சார தட்டுப்பாடு மற்றும் மின்சார விநியோக தடை, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தினால் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து அரசாங்கம் இதுவரை அவதானம் செலுத்தவில்லை என அவர் தெரிவித்தார். (நி)






# இராசிபலன்

28.06.2022
ஆனி 14, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி காலை 6.31 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 7.53 மணிவரை
சுப நேரம்-10.25-11.55 மணிவரை
இராகு காலம்-2.55-4.25 மணிவரை
அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்-விசாகம், அனுசம்

வளவன்




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, சஞ்சலங்கள் சற்று கூடும் நாள்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




இல்லத்தில் இனிய காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அக்கறை தேவை, உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும்.




சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும் நாள்.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் இன்னொரு வகையில் செலவு ஏற்படலாம், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கற்பனை மிகுதியான நாள்.




காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், பிறர் உதவியுண்டு, கௌரவமான நாள்.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதாரம் உயரும், பயணங்கள் கைகூடும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

ஆன்மிக மகிழ்ச்சி வான வில்லைப் போன்று அழகானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் எரிபொருள் முற்பதிவு செய்ய நீண்ட வரிசை



(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று திங்கட்கிழமை காலை தொடக்கம் எரிபொருட்களுக்கு முற்பதிவினை மேற்கொள்ள பெருந்திரளானவர் கள் நீண்ட வரிசையில் காத்தி ருந்தனர்.

அவ்வாறு வரிசையில் நின்றவர்களுக்கு இராணுவத்தினர் டோக்கன் வழங்கி வழியனுப்பி வைத்திருந்தமை குறி ப்பிடத்தக்கது. (நி-6-30)

## வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையில் முதற்கட்டமாக நுண்கலைப் பட்டதாரிகள் மற்றும் வணிகமாணிப் பட்டதாரிகளுக்கு நடைபெறவுள்ளன. அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரங்களை வடமாகாண சபையின் இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் www.edumin.np.gov.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும்ஜூலைமாதம்04.07.2022 தொடக்கம் 08.07.2022 வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது. இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேர ஒழுங்கிற்கமைவாக தேசிய அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பிறப்பு பதிவுச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ், (திருமணமான பெண்கள் மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்), க.பொ.த.சா/த சான்றிதழ், க.பொ.த. உ/த சான்றிதழ், அதிபரினால் வழங்கப்படும் நற்சான்றிதழ், கிராம உத்தியோகத்தரால் வழங்கப்படும் வதிவிட, குணநல சான்றிதழ், தேடுநர் இடாப்பு பிரதி, பட்டச் சான்றிதழ், பட்ட விபரக் கூற்று (Statement) மற்றும் விரிவான பெறுபேற்று அட்டவணை ஆகிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வடக்கு மாகாணக் கல்வி பண் பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.(நி-6)

## வடமராட்சியில் கிராம உத்தியோகத்தர்கள் சுகவீன லீவு போராட்டம்

(கரணவாய்)

முன்னுரிமை அடிப்படையில் கிராம உத்தியோகத்தர்களிற்கு பெற்றோல் வழங்காமையைக் கண்டித்து நேற்று திங்கட்கிழமை ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 35 கிராம உத்தியோகத்தர்கள் முன்னெடுத்தனர்.

இந்த சுகவீன லீவுப் போராட்டம் காரணமாக கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிற்கு வருகை தந்த பொதுமக்கள் தமக்குரிய சேவைகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். (நி-6-60)

## நல்லூர் முருகன் உற்சவகால

# தெய்வீக இசை அரங்கிற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி "தெய்வீக இசையரங்கு" 2022 ஆம் ஆண்டு நிகழ்விற்கான கலைஞர் களிட்மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை IlamKalaignar mamdram எனும் முகநூலின் ஊடாக தரவிறக்கம் செய்யலாம். அல்லது மன்றக் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள கலைஞர்கள் மட்டும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து ikm.jaf.lk@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாக தமிழில் மட்டும் அனுப்பி வைக்கலாம் எனவும் ஏனைய கலைஞர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் சட்டநாதர் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மன்றச் செயலாளர் ந.செல்வச்சந்திரன் அறிவித்துள்ளார். (நி-6)

# எரிபொருளை பெற்றுத் தரக் கோரி இ.போ.ச. ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு



(நெளுக்குளம்)

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர்.

வடமாகாணத்திலுள்ள ஏழு சாலைகளில் பணியாற்றும் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் ஊழியர்கள் கடமைக்கு செல்வதற்கான பெற்றோலினை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக தமக்கான பெற்றோலினை உரிய முறையில் பெற்றுத்தர வேண்டும் என தெரிவித்து ஏழு சாலைகளை சேர்ந்த சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை தமக்கான உரிய தீர்வினை பெற்றுத்தரும் வரை இப்பணிபகிஷ்கரிப்பு தொடரும் என சாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

இப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிட்டத்தக்கது. (நி-6-33-60-299)

# அச்சுவேலி எரிபொருள் நிலையத்தில் புதிய பதிவுகளால் குழப்பநிலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு என இராணுவத் தினர் பதிவுகளை மேற்கொண் டமையால் சிறிது நேரம் குழப்ப நிலை ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காலை முதல் இராணுவத்தினர் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு என பதிவுகளை முன்னெடுத்த போது அதனை கேள்வியுற்று பலர் பதிவுகளை மேற்கொள்ள முண்டியடித்தனர்.


குறித்த விடயம் தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து பிரதேச செயலர் மண்ணெண்ணெய் விவசாயிகளுக்கு மாத்திரமே பகிர்ந்தளிக்க உள்ளதாகவும் ஏனையோருக்கு விநியோகிக்க முடியாது என இராணுவத்தினருக்கு தெரிவித்ததை அடுத்து பதிவு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. (நி-6-33)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சாந்தா தோட்டம் அருள் மிகு ஸ்ரீ முதலி (மனோன் மணி) அம்பாள் ஆலய தர்ம பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் க.ராகீஷ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை செயலாளர் இ.கிருபாகர சூரியன் அறிவித்துள்ளார். (நி-6)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த மஹோற்சவம் நாளை



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப்பெருவிழா நாளை 29 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பதினாறு நாட் கள் இடம்பெறவுள்ள இவ் ஆலய திருவிழாவில் எதிர்வரும் ஜூலை 11 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் கயிலைக் காட்சியும் இரவு சப்பரமும் அடுத்த நாள் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 13 ஆம் திகதி புதன்கிழமை கங்காதரணியில் தீர்த்தோற்சவமும், இரவு திருவூஞ்சல் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை விநியோகிக்க எரிபொருள் இல்லை

## உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

**(கொழும்பு)**

**துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கான எரிபொருள் பற்றாக்குறையால், தற்போது மேல் மாகாணத்திற்கு மட்டுமே விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை துறைமுக கொள்கலன் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.**

இதன் காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதன் தலைவர் சனத் மஞ்சுள சுட்டிக்காட்டியுள்ளார்.

இணையத்தளத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொண்டு செல்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து துறைமுகத்தில் உள்ள கொள்கலன் போர்ட்டர்கள் அடுத்த வாரம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலைமை காரணமாக எதிர்வரும் சில நாட்களில் நாட்டில் கடுமையான உணவுப்பற்றாக்குறை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மரக்கறி விநியோகம்

## முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து

(கொழும்பு)

மரக்கறி உற்பத்திகளை சந்தைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் நாடு முழுவதும் விநியோகிப்பது முற்றாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மீண்டும் எரிபொருள் விலைகளை அதிகரிக்கப்பட்டமையே இதற்கு காரணம் எனவும் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கமத்தொழில் வளர்ச்சி குறித்து அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டாது எடுக்கும் முடிவுகள் காரணமாக மரக்கறிகளை பயிரிடும் உழவர்கள் பயிர்ச்செய்கையில் இருந்து விலகிச் செல்வதை நிறுத்த முடியாது என சங்கத்தின் தலைவர் அருண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் இருக்கும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மரக்கறிகளை மொத்தமாக கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை நேற்று முன்தினம் 95 வீதமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டதுடன் விநியோகமும் 90 வீதம் குறைந்துபோனதாக அவர் தெரிவித்தார். (நி)

# அதிக பணவீக்கம் பதிவாகிய நாடுகளில் இலங்கைக்கு இரண்டாவது இடம்

(கொழும்பு)

அதிக பணவீக்கம் பதிவாகிய நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு இரண்டாவது இடம் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஸ்டீவ் ஹான்கே, அதிக பணவீக்கம் பதிவாகிய நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் ஸ்டீவ் ஹான்கேயின் மதிப்பீட்டின்படி, உலகில் வருடமொன்றுக்கு அதிக பணவீக்கம் விகிதம் பதிவாகிய நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.

அறிக்கையின்படி, சிம்பாவே முதலிடத்தில் இருக்கும் அதேவேளை, துருக்கி இலங்கைக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்திலும் லெபனான் 4 ஆவது இடத்திலும் உள்ளது. (நி)

# எரிபொருட்களை வீடுகளில் சேமித்து வைப்பது ஆபத்தானது

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

வீடுகளில் எரிபொருட்களை சேமித்து வைப்பதால் பெரும் ஆபத்து நேரலாம். அநியாமாக உயிரிழப்புகள் ஏற்படலாம் என பொலிஸார் எச்சரித்துள்ளனர். எரிபொருட்களை வீடுகளில் சேமித்து வைக்க வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ அறிவுறுத்தியுள்ளார்.

ஹோமாகமவில் கடந்த சனிக்கிழமை இரவு வீடொன்று தீக்கிரையானதில் வீட்டுக்குள் இருந்த கணவன், மனைவி தீயில் கருகி உயிரிழந்தனர். அவர்களின் இரண்டு குழந்தைகள் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த எரிபொருள் கொள்கலனில் இருந்து தீ பரவியதே இந்த அனர்த்தத்துக்கு காரணம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (நி)


## அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பொதுமுகாமையாளர் (101/08) பதவி வெற்றிடத்திற்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் கல்வி, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை இணைத்து தலைவர், அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி என்னும் முகவரிக்கு 14.07.2022ம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதவி : பொதுமுகாமையாளர் (101/08)**

**சம்பள அளவுத்திட்டம் : 18425 - 23225**

**230*10 - 250*10**

**பதவிக்குரிய தகைமைகள் :**

அ. கூட்டுறவு ஊழியர் 9வது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகள் அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச் சமனான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./ இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலைப் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்/ க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.

குறிப்பு: 1. பதவிக்கான வயதெல்லை 18-45

2. சங்க பணியாளர்களிற்கு வயதெல்லை பொருந்தாது.

3. மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்த வேண்டும்.

(C-4545)

28.06.2022

தலைவர்
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 70 சூரி 6 செவ் 8<br>தகைமை/தொழில்: MBBS (வைத்தியர்)<br>உயரம்: 168 cm<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/12783 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 28½ சூரி 9 செவ் 10<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பிரான்ஸ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பிரான்ஸ் மட்டும்<br>தொ.இ:G/12787 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 42 ¾ சூரி 3 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: MBA (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12785 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 11 சூரி 3 செவ் 11 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் Bcom Clerk அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/12798 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 32 சூரி 9 செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12786 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 31 சூரி 3 செவ் 4 இல் உயரம் : 4'11"<br>தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:G/12800 |
| பிறப்பு: 1981 கிறிஸ்தவம்<br>உயரம்: 167 cm<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த கிறிஸ்தவ பெண்<br>தொ.இ: B/12788 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: 21 சூரி 6 செவ் 2 இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:BSc (Pera) Engineer - தனியார்<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ:G/10391 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 82

# நானும் மனிதன் தானே



அதிகாலை துயில் எழுந்து பணியாற்றும் அரசு கூலி நான்.
குமட்டும் குப்பையில் உங்களின் மனக்குப்பையை
காண்பவன் நான்
பிரித்து போட சொன்னால், தொட்டியை சுற்றி விரித்து போடும்
சுற்றத்தை காக்க வந்தவன் நான்
அப்பப்பா எத்தனை கழிவுகள் இவர்களிடத்தில்..
அன்றாட கழிவுகள்
அழுகிய கழிவுகள் அசிங்க கழிவுகள்
நெஞ்சம் பதைபதைக்கும் கழிவுகள் என ஆயிரமாயிரமாய் .
மண்ணோமரம் தருகிறது .
மரமோ மழை தருகிறது
ஆனால் மதி புடைத்தோரும், மதி கெட்டோரும் மண்ணை
மலடாக்குகிறீர்களே!
நீரோ சுத்தம் செய்கிறது அதை கழிவு ஆக்கி கண்ணை மூடி
கொள்கிறார்களே!
காற்றோ சுவாசம் தருகிறது அதை நஞ்சாக்கி நாசம்
காண்கிறார்களே! .
இயற்கை எதை கொடுத்தாலும் ஈவு ஈரக்கமின்றி அதை
துவம்சம் செய்யும் மானிடர்களே..
ஆற்றலாலும் அறிவியலில் ஆயிரம் தான் நீ உயர்ந்தாலும்.
குணத்திலே நீ குப்பையை விட மோசம் என்பதை
புரிந்து கொள்.
மலத்தை மடித்து சாலையில் வீசும் மனித அரக்கர்களே.
மனமில்லையா உனக்கு .. நானும் மனிதன் தான் என்று..
புரிந்து கொள். உன் நலம் காக்க என் குலம்
அழிப்பவன் நான்.
தினம் குப்பையை சாலையில் எறிந்து முகத்தை மூடி
வாழ்க்கை நடத்தும் நாற்றம் பிடித்த மனிதர்களே!
ஒருமுறை காலை வேளை என்னோடு சாலைக்கு வா.
உன் சகமனிதர்களின் மனக் குப்பைகளை காட்டுகிறேன்!
நீ சந்தோசமாய் சந்ததிகளோடு வாழ நான் படும்
சங்கடங்களை சந்தித்து செல்வாய்.
உன் தலைமுறைக்காக என் தலைமுறையை
அழிக்கும் தலைமுறையினர்களே..
இனியாவது சுத்தமாய் வாழ கற்றுக்கொள்.
தரம் பிரிக்கும் குப்பைகளை நீயே மக்க வைத்து மண்ணின்
வளம் பெருக்கு.
குப்பை இல்லா சாலை கொள்வோம். சுகாதாரமான
வாழ்க்கை கொள்வோம்.
என்னோடு அதிகாலை நடை பயணிப்பாய்.
என்னோடு இந்த அவலம் போக துணை நிற்பாய்!

**அன்புடன்,**
**சுகாதார பணியாளர்களின்**
**நண்பன்.**

# ரஷ்யாவிடம் இருந்

# ஜி-7 நாடு

(பேர்லின்)

**ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை கடுமையாக்கும் வகையில் ரஷ்யாவிடம் இரு இறக்குமதி செய்ய அமெரிக்கா உள்ளிட்ட ஜி-7 தடை விதிக்கும் என ஜனாதிபதி ஜோ பைடன் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.**

இது உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு போரை தொடுத்துள்ள ரஷ்யாவை பொருளாதார ரீதியாக மேலும் தனிமைப்படுத்தும் என ஜி-7 தலைவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் ஆகிய 7 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள ஜி-7 அமைப்பின் 48 ஆவது உச்சி மாநாடு ஜேர்மனியின் ஸ்லாஸ் எல்மவ் நட்சத்திர விடுதியில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இந்நிலையில் மாநாட்டின் இறுதி நாளான இன்று செவ்வாய்க்கிழமை ரஷ்யாவிடம் இருந்து தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு தடை விதி

# 'கீவ்' மீதான தொடர் தாக்குதல் ஆரம்பித்தது ரஷ்யா



(கீவ்)

உக்ரைன் தலைநகரை மிக அண்மையில் நெருங்கி விட்ட ரஷ்ய படைகள் தலைநகர் மீது கண் மூடித்தனமான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் 7 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், அதில் 7 வயது பெண் குழந்தையும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தலைநகர் கீவ்வில் மக்கள் இன்னும் வெளியேறாமல் இருப்பதாகவும், அவர்களை வெளியேற்ற கால அவகாசம் தேவை என உக்ரைன் தொண்டு அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

இந்நிலையில் ரஷ்யாவின் தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று வருதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ந)

# உக்ரைன் படையெடுப்பு

## முதல் முறையாக் வெளிநாடு எ

(மொஸ்கோ)

ரஷ்யா-உக்ரைன் போருக்குப் பிறகு விளாடிமிர் புடின் முதல் முறையாக வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்த வாரம் மத்திய ஆசியாவில் உள்ள இரண்டு சிறிய முன்னாள் சோவியத் நாடுகளுக்குச் செல்வார் என்று ரஷ்ய அரசு தொலைக் காட்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# து தங்க இறக்குமதிக்கு தடை விதிக்க
# கள் கூட்டாக முடிவு

டகளை மேலும்
ருந்து தங்கத்தை
-7 நாடுகளின் குழு
நேற்று முன்தினம்

க்கும் முடிவை ஜி-7 தலைவர்கள் கூட்டாக அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தங்க ஏற்றுமதி ரஷ்யாவிற்கு பல்லாயிரக்கணக்கான டொலர்களை சம்பாதித்து கொடுக்கிறது.

ரஷ்யாவிடம் இருந்து தங்கத்தின் இறக்குமதியை நாங்கள் தடைசெய்வோம். இதனை ஜி-7 நாடுகள் கூட்டாக அறிவிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி பைடன் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தங்கத்தின் மீதான தடை ரஷ்ய தன்னலக்குழுக்களை நேரடியாக தாக்கும் மற்றும் புடினின் போர் இயந்திரத்தின் இதயத்தில் தாக்கும் என பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கருத்து வெளியிட்டுள்ளார்.

அர்த்தமற்ற மற்றும் காட்டுமிராண்டித்தனமான போரில் புடின் வளங்களை வீணடிக்கிறார்.

எனவே, பொருளாதார ரீதியில் அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் எனவும் போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

சக ஜி-7 உறுப்பு நாடுகளான கனடா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து எடுக்கப்பட்ட கூட்டு நடவடிக்கையாக பிரிட்டனால் இந்த நடவடிக்கை ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.


எரிசக்திக்கு அடுத்தபடியாக, ரஷ்யாவிற்கு இரண்டாவது பெரிய வருவாயை ஈட்டித் தருவது தங்க ஏற்றுமதியாகும். புடின் மற்றும் ரஷ்யாவிற்கு குறிப்பிடத்தக்க வருவாய் ஆதாரமாக தங்க ஏற்றுமதி உள்ளது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வங்கிகள், எரிசக்தி நிறுவனங்கள், விமான நிறுவனங்கள், உயர் தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர் பொருட்களுக்கு எதிரான மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் ரஷ்யாவின் பொருளாதாரம் ஏற்கனவே பெரும் அழுத்தத்தில் உள்ளது.

இப்போது, தங்கச் சந்தையிலும் தடை என்பது ரஷ்யாவின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் மொத்த தங்க ஏற்றுமதியில் ஐந்து வீதம் மற்றும் ரஷ்யாவின் மொத்த உற்பத்தியில் 90 சதவிகிதம் ஜி-7 நாடுகளுக்கு சென்றது என வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## லெபனானில் 3 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில் குழந்தை பலி



(திரிபோலி)

லெபனான் நாட்டின் வடக்கே குய்பே மாவட்டத்தின் திரிபோலி நகரில் 3 மாடிக் கட்டடம் ஒன்று திடீரென நேற்று முன்தினம் இடிந்து விழுந்தது.


இச்சம்பவத்தில் சிக்கி குழந்தை ஒன்று உயிரிழந்தது. பலர் காயமடைந்துள்ளனர். கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் தெரிய வரவில்லை. இது பற்றிய தகவல் அறிந்து மீட்பு குழுவினர் சம்பவ பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் காயமடைந்த நபர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். (நி)

## காளைச் சண்டைப் போட்டி
## பார்வையாளர் கலரி உடைந்ததில் 6 பேர் பலி; 200 பேர் படுகாயம்
### கொலம்பியாவில் துயரம்

(கொலம்பியா)

தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் காளைச் சண்டை போட்டியின் போது பார்வையாளர்கள் கலரி உடைந்து விழுந்து நொறுங்கியதில் 6 பேர் பலியாகியதுடன் 200 பார்வையாளர்கள் படுகாயமடைந்தனர்.

எல்எஸ்பினல் நகர மைதானத்தில் நடைபெற்ற காளைச் சண்டை போட்டியில் மூங்கில் மற்றும் தென்னம் பலகைகளை கொண்டு பார்வையாளர்கள் கலரி அமைக்கப்பட்டது. போட்டி



நடந்து கொண்டு இருந்த நிலையில், பாரம் தாங்காமல் கலரி உடைந்து விழுந்தது.

விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், 200 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி)

## ...க்கு பிறகு
## ...செல்லும் புடின்

...ளது.

உக்ரைன் மீதான படையெடுப்பிற்கு உத்தரவிட்ட பிறகு ஜனாதிபதி விளாடிமிர் புடினின் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.



ரஷ்யாவின் "Ross... தொலைக்காட்சி... iya 1" எனும் அரசு ... விளாடிமிர் புடின் தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தானுக்கு பயணம் செய்வார் என்றும் பின்னர் மொஸ்கோவில் பேச்சுவார்த்தைக்காக இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவை சந்திப்பார் என்றும் தெரிவித்துள்ளது.

துஷான்பேயில், புடின் தஜிகிஸ்தான் ஜனாதிபதி இமோமலி ரக்மோனை சந்திப்பார், பின்னர் அஷ்கபாத்தில், அஜர்பைஜான், கஜகஸ்தான், ஈரான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் உட்பட காஸ்பியன் நாடுகளின் உச்சிமாநாட்டில் அவர் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடுவதே தீர்வானால் அரசாங்கத்தையும் மூடலாம்

## மகிந்த தேசப்பிரிய டுவிட்



(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைக்கு மத்தியில் மக்கள் கடும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தனது முகநூலில் பதிவொன்றை இட்டுள்ளார். குறித்த பதிவில்,

பல்கலைக்கழகங்கள், அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளை மூடுவதே நெருக்கடிக்கு தீர்வாக இருந்தால், அரசாங்கம் மூடலாம் எனப் பதிவிட்டுள்ளார். (நி)

# திருக்கேதீஸ்வரத்தில் நிறுவப்பட்ட நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை





(குப்பிழான்)

நல்லை நகர் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயச் சூழலில் (பாலாவி தீர்த்தக்கரை சந்தி யில்) சிவபூமி அறக் கட்டளை யின் தலைவர், செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திரு முருகனின் நிதிப்பங்களிப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நிறுவப்பட்டது. (நி-6-18-33)

# கடும் நெருக்கடியால் மூடப்படும் மருத்துவமனைகள்


(மொனராகலை)

சுகாதாரத்துறையில் நிலவும் கடுமையான மருந்து தட்டுப்பாடு காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கிராம மட்ட மருத்துவமனைகள் மூடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மிகவும் கஷ்டப் பிரதேசமான மொனராகலையின் சியம் பலாண்டுவை மருத்துவமனை தற்போது மருந்து பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் இன்னும் பல்வேறு மருத்துவமனைகள் மருந்து தட்டுப்பாடு காரணமாக மூடப்படும் அபாயம் எதிர்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# வவுனியாவில் பதுக்கி வைக்கப்பட்ட 3000 லீற்றர் டீசல் மீட்பு

## ஒருவர் கைது



(குருமன்காடு)

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல ஹாட்வெயார் கடை ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3000 லீற்றர் டீசல் விசேட சோதனை் நடவடிக்கையின் போது நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து நெளுக்குளம்பொலிஸார் வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரபல ஹாட்வெயார் கடை ஒன்றினை சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த ஹாட்வெயார் கடையின் களஞ்சிய சாலைப்பகுதியில் 15 பரல்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3000 லீற்றர் டீசல் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த 15 பரல்களில் காணப்பட்ட 3000 லீற்றர் டீசலும் நெளுக்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஹாட்வெயார் கடையில் களஞ்சிய பகுதியில் கடமையாற்றும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். (நி-6-250)

# யூரியா ஏற்றிய கப்பல் வர இரண்டு நாட்கள் தாமதமாகும்

(கொழும்பு)

இலங்கைக்கான யூரியா ஏற்றிய கப்பல் வர இன்னும் இரண்டு நாட்கள் தாமதமாகும் என கொழும்பு கொமர்ஷல் உர நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜூலை 6 ஆம் திகதி ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் உரத்துடன் கூடிய மற்றுமொரு கப்பல் விரைவில் இலங்கையை வந்தடையும் என சிரேஷ்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அனுப்பப்படும் உரத்தில் 40,000 மெற்றிக் தொன் யூரியா உள்ளது.

ஏற்றுமதி வந்தவுடன், இலங்கை தரநிலை நிறுவனம் மற்றும் பல நிறுவனங்கள் மாதிரிகளை பரிசோதித்து ஒரு வாரத்திற்குள் நாடு முழுவதும் இருப்புக்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய உர செயலகம் குறிப்பிட்டுள்ளது. (நி)



முல்லைத் தீவு-குமுழமுனை தாமரைக்கேணி சிறுவர்களுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. வெற்றியீட்டிய முன்பள்ளி சிறார்களுக்கு பரிசுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்-சதீஸ்)



நல்லை திருஞானசம் பந்தர் ஆதீனம் - இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையோடு முன்னெடுத்து வரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் ஏழாவது நிகழ்வு, கோண்டாவில், அண்மையில் நல்லை ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நூலறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**

வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020
- மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020

மேற்படி பரீட்சைகளினை 09.07.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 18.07.2022 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன்.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 07.07.2022 (வியாழக்கிழமை) தொடக்கம் 08.07.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 - 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவுக்கு ஆதரவு வழங்கியதன் சாபத்தை தற்போது அனுபவிக்கின்றோம்

### முருத்தெட்டுவே தேரர் ஆதங்கம்

(கொழும்பு)

**கோட்டா அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதன் சாபத்தை தற்போது எதிர்கொள்வதாக அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**



அத்துடன் ஜனாதிபதியால் அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியாது என்பது உறுதியாகி விட்டது எனவும் அவர் தனது ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அபயராம் விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர்,

சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கை மக்கள் என்றும் இல்லாதவாறு மிக மோசமான அவல நிலையினை தற்போது எதிர்கொண்டுள்ளார்கள். பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆடம்பர வாழ்க்கையினை மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆடம்பர வாழ்க்கையல்ல தற்போது ஒருவேளை உணவை பெற்றுக் கொள்வது கூட பெரும் போராட்டமாக உள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம் என்பது உண்மை, அதனை மறுக்கவில்லை.

அதன் சாபத்தை தற்போது எதிர்க்கொள்கிறோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகம் தொடர்பில் இதுவரை நாம் எதனையும் குறிப்பிடவில்லை. தற்போது குறிப்பிடுவதற்கான காலம் உதயமாகியுள்ளது. ஜனாதிபதியால் அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியாது என்பது உறுதியாகி விட்டது.

இலங்கை மக்கள் உணவிற்காக போராடும் நிலையும், பெற்ற பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாத நிலையில் பிள்ளையினை தாய் ஆற்றில் எறியும் நிலைமையும் இலங்கை வரலாற்றில் இதுவரை தோற்றம் பெறவில்லை. இன்று செல்வந்தர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள், ஏழ்மையில் உள்ளவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி பிற நாடுகளிடம் யாசகம் பெற்றாவது நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும். ஏனெனில் குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை சீரழித்தவர்கள் அதற்கான பிரதிபலனை பெற வேண்டும். மிகவும் மன வேதனையுடன் உள்ளோம். நாட்டின் தற்போதைய நிலைமைக்கு தீர்வு காணாவிடின் நாட்டின் எதிர்காலம் முழுமையாக இல்லாதொழியும்.

பாரிய எதிர்பார்ப்பிற்கு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பு முழுமையாக இல்லாமல் போயுள்ளது.

பிரச்சினைகளுக்கு முடிந்தால் ஜனாதிபதி தீர்வு காண வேண்டும் இல்லாவிடின் பதவி விலக வேண்டும்.

தற்போதைய நிலையில் யார் ஜனாதிபதி, யார் பிரதமர் என்பது எமக்கு முக்கியமல்ல. நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும். மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு அவசியம் எனவும் தெரிவித்தார். (நி)

### மட்டக்களப்பில்

## பதுக்கி வைக்கப்பட்ட எரிபொருட்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள மாவடி வேம்பு பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல், 258 லீற்றர் மண்ணெண்ணெய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குற்ற விசாரணைப் பிரிவிற்கு கிடைத்த தகவல் ஒன்றினை அடுத்து நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு குறித்த பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள கட்டடத்தை முற்றுகையிட்டனர்.

இதன் போது பரல்களில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல், 258 லீற்றர் மண்ணெண்ணையை மீட்டதுடன் ஒருவரை கைது செய்து சந்திவெளி பொலிஸாரிடம் ஒப்புடைத்துள்ளனர். (நி)

## பெருந்தொகை டீசலுடன் உழவு இயந்திரம் முற்றுகை




(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று - பட்டியடிப் பிட்டி இராணுவச்சாவடி அருகில் 25 சிறிய கொள்கலன்களுடன் உழவு இயந்திரமொன்றில். கொண்டு செல்லப்பட்ட டீசல் பொதுமக்களால் சுற்றி வளைக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைக்காக அக்கரைப்பற்றில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் இருந்து கொண்டு செல்லப்பட்டதாக கருதப்படும் சிறிய டீசல் கொள்கலன்களே இவ்வாறு பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (நி)

## வருமானத்தை இழக்கும் நெடுஞ்சாலை

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி காரணமாக சுமார் 28 மில்லியன் ரூபாய் நாளாந்த வருமானத்தை பெற்று வந்த அதிவேக நெடுஞ்சாலையின் வருமானம் பாதியாக தற்போது குறைந்துள்ளதாக நெடுஞ்சாலை செயற்பாடு கள் (பராமரிப்பு மற்றும் மேலாண்மை) இயக்குநர் நிஹால் லோடிவிக் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடிக்கு முன்பிருந்த வருமானம் கிட்டத்தட்ட பாதியாக குறைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

### கொள்கலன் போக்குவரத்திற்கான கட்டணங்கள் அதிகரிப்பு

( கொழும்பு)

கொள்கலன் போக்குவரத்திற்கான கட்டணங்களை அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை கொள்கலன் உரிமையாளர் சங்கம் தெரிவித்து ள்ளது.

அதன்படி, நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் 10 சதவீதத்தால் போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்படுவதாக அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## பிரதமரை சந்தித்த அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் குழு

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக்கள மற்றும் அமெரிக்க திறைசேரி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளனர்.

குறித்த குழுவினர் நேற்று முன்தினம் காலை இலங்கையை வந்தடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 320 |
| உருளைக்கிழங்கு | 280 | 250 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 600 | 600 |
| தக்காளி | 600 | 500 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 200 | 150 |
| கோவா | 280 | 250 | 350 | 350 |
| கரட் | 200 | 340 | 360 | 400 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 150 | 150 | 180 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 380 | 300 | 400 | 600 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 250 |
| பாகற்காய் | 400 | 400 | 450 | 600 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 240 | 220 |
| பயற்றங்காய் | 200 | 250 | 240 | 240 |
| லீக்ஸ் | 250 | 200 | 180 | 300 |
| பீற்றூட் | 200 | 250 | 280 | 350 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 500 | 400 |
| போஞ்சி | 600 | 550 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | 550 |
| முள்ளங்கி | 160 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | — | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா



### இரு தானங்கள்

வேம்பூரில் வெங்கடசாமி என்ற பண்ணையார் இருந்தார். அவரை எல்லோரும் கர்ண பிரபு என்று பாராட்டி வந்தனர். ஏனெனில் அவர் ஏராளமான தான தர்மங்களைச் செய்து வந்தார். அதனால் அவரது சொத்தெல்லாம் கரைந்து கொண்டே போயிற்று. அது கண்டு சற்றும் மனம் தளராமல் அவர் பிறரது நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து எப்போதும் போல வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் வெங்கடசாமி வீட்டுத் திண்ணையில் அவரும் அவ்வூர் புரோகிதர் பரமேசுவரனும் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பிராமணர் அங்கு வந்தார். வெங்கடசாமி அவரை வணங்கி வரவேற்றுப் புரோகிதரின் பக்கத்தில் உட்காரச் சொன்னார். அவர் தம்மிடம் வந்த காரணம் என்னவோ என்று வெங்கடசாமி கேட்க அந்த பிராமணரும் "நான் இவ்வூர் பணக்காரரர் திருவேங்கடத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு வந்தேன்.

அவர் அவரது முன்னோர்களைப் போல பிராமணர்களுக்கு வேட்டியும் கை நிறைய தட்சணையும் கொடுப்பார் என்று எதிர் பார்த்து பத்து மைல் தூரத்திலிருந்து நடந்து இங்கு வந்தேன். ஆனால் அவர் கொடுத்த இந்த கால் ரூபாய் தட்சணையைக் கண்டு மனம் உடைந்து போனேன். நான் வந்தது என் முட்டாள்தனத்தால் தானே என எண்ணி ஊர் திரும்ப நினைத்தபோது உங்களைப் பற்றி அப்போது பலரும் சொன்னதைக் கேட்டேன். கொடையாளி என்று பெயர் பெற்ற உங்களைப் பார்த்து விட்டு போகலாம் என்றுதான் வந்தேன" என்றார்.

அதைக் கேட்டு வெங்கடசாமி சட்டென எழுந்து வீட்டிற்குள் போனார். ஒரு தட்டில் ஒரு ஜதை வேட்டி, தேங்காய், பழம், பத்து ரூபாய் தட்சணை வைத்து எடுத்து வந்து அவர் அப்பிராமணரிடம் கொடுத்து "இதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

கர்ணன் போல் அள்ளிக் கொடுக்க முடியாமல் போனாலும் என் சக்திக்குக் தகுந்ததைக் கொடுக்கிறேன் என்றார்.


பிறகு அவர், "என் தாயார் இறந்த போது என்னால் பூதானம் செய்ய முடியாமல் போய் விட்டது. இந்தப் புரோகிதருக்கு அப்போது ஒரு ரூபாய் தட்சணை கொடுத்து விட்டுப் பிறகு பூமி தானம் கொடுப்பதாகச் சொன்னேன். இன்னும் அதை செய்து முடிக்கவில்லை. அதை நான் விரைவில் செய்யும் நிலை ஏற்பட வேண்டும் என்று என்னை ஆசீர்வதியுங்கள்" என்றார்.

பிராமணரும் வெங்கடசாமி கொடுத்ததை எல்லாம் எடுத்துக் கொண்டு அவரது உள்ளங்கையை நீட்டச் சொன்னார்.

(தொடரும்)

## கம்பராமாயணம்

### யுத்த காண்டம்




செய்தி கேட்ட இராமன், களம் நோக்கி விரைந்தான்; தம்பி நிலைகண்டு, உளம் தளர்ந்தான்; "களத்தில் தம்பியைப் பறி கொடுத்து விட்டோமே என்று பரிதவித்தான். வழிகாட்டும் விழியற்றான்; இருளில் உழன்றான்; யுகமுடிவில் கடல்பிரளயம் மண்ணை மூடிக்கொள்வது போல வேதனை அவனை வயப்படுத்திக் கொண்டது. தேவர் செய்வது அறியாது திகைத்தனர்.

எதிர்பாராத விதமாய் வானத்தில் கருடன் பறந்து கொண்டிருந்தது; நிதானமாய்க் கீழே நடப்பதைக் கண்டது; சிறகுகளைக் குவித்துக் கொண்டு கீழே இறங்கியது; தன் சிறகுகளை அவர்கள் மீது விரித்துக் காற்றை வீசியது. அவர்கள் மீது கருடன் காற்றுப்பட்டது; திருடனைத் தேள் கொட்டியதைப் போல நாகங்கள் நடுங்கின; கட்டு அவிழ்ந்து நெகிழ்ந்தன; செத்தவர் உயிர் பெற்றது போல இருவரும் விடுதலை பெற்றனர். 'இலக்குவன் இறந்திருப்பான்' என்ற நம்பிக்கையில் இந்திரஜித்து அரண்மனையில் தங்கிவிட்டான். நாகங்களின் பிணிப்பில் அவர்கள் அகப்படவில்லை என்ற செய்தி இராவணனுக்கு எட்டியது; மகனை அவன் அறிவீனத்துக்காகக் கடிந்து கொண்டான். மறுநாள் போரில் இந்திரஜித்து, வேகமாய்ச் செயற்பட்டான்; இலக்குவனொடு நேருக்கு நேர் சந்தித்துப் போர் செய்தான்; நாகபாசம் ஏவித் தன் ஆகத்தைக் கட்டியவனை அயன்படை கொண்டு அழிக்க இலக்குவன் விரும்பினான் இராமன் "அஃது அறமன்று" என்று கூறித் தடுத்து நிறுத்தினான்; 'அதே அயன் படையை இலக்குவன் மீது எறிவது' என்று தீர்மானித்து, இந்திரஜித்துக் களம் விட்டு வெளியேறினான்; 'அவன் அஞ்சி ஓடிவிட்டான்' என்று கணக்கைத் தவறாய்ப் போட்டு விட்டனர்; அவன் அரண் மனைக்குச் சென்று, தந்தையைச் சந்தித்துத் திட்டத்தை பற்றிக் கூறினான்.

அயன்படை, பெறுதற்கு வேள்வி செய்ய வேண்டியிருந்தது; அதுவரை மகோதரனைப் போருக்கு அனுப்பி இலக்குவனைக் களத்தில் மடக்கி வைத்தனர். மகோதரன் இலக்குவனுக்கு ஆற்றாமல் ஓடி விண்ணில் ஒளிந்தான்; அங்கிருந்து ஐராவதம் என்னும் யானை மீது அமர்ந்து இந்திரனைப் போல வேடம் புனைந்து, முனிவர்களையும் தேவர்களையும் வஞ்சித்து அழைத்துக் கொண்டு மண்ணுலகம் வந்து, இலக்குவனோடு போர் தொடுத்தான்; வானவரோடு போர் செய்தலை வானரங்கள் விரும்பவில்லை; தேவர்கள் ஏன் தன்னை எதிர்க்கிறார்கள்?' என்பது இலக்குவனுக்குப் புரியாத புதிராய் இருந்தது.

செயலிழந்த இந் நேரத்தில் அயன்படையை இந்திரஜித்து ஏவினான். அப்படையினின்று அளவு மிக்க அம்புகள் வெளிப்பட்டு, வானரர் மீதும் ஏனைய படைஞர் மீதும் பாய்ந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
>
> – அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கோமா நிலைக்குப் போகிறது இலங்கை காப்பாற்ற யாரும் இல்லை

கொஞ்சம் கொஞ்சமாக நாடு செயலிழந்து வருகிறது.

எரிபொருள் எப்போது வரும் என்று கூற முடியாதென அதற்குப் பொறுப்பான அமைச்சர் கூறும்போது, நாடு எந்த நிலையில் இருக்கிறதென்பதை ஊகிப்பதில் கடினம் இருக்க முடியாது.

அந்தோ! கொடுமையிலும் கொடுமை என்று சொல்லுமளவுக்கு எரிபொருள் தட்டுப்பாடு மக்களை வாட்டி வதைக்கிறது.

அதைவிடக் கொடுமை வரிசையில் நின்று பெற்றோல் மற்றும் டீசலைப் பெற்றுக் கொண்டவர்களில் ஒரு பகுதியினர் அந்த இடத்திலேயே அதனை உறிஞ்சி கறுப்புச் சந்தை விலையில் விற்று விடுகின்றனர்.

அதேநேரம் அரைலீற்றர் பெற்றோல் இருந்தால் என் பிள்ளையை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்ல முடியும் என்று ஏங்குகின்ற பெற்றோர்களின் பரிதாபமும் நீடிக்கிறது.

இந்த நிலையில் எரிபொருள் பங்கீட்டு முறைகளும் பொறுமையாக இருக்கும் மக்களைக் காப்பாற்றவில்லை.

உண்மை பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னமும் பெற்றோலை – டீசலை பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

அவர்களின் அமைதியும் அடக்கமும் அவர்களின் நல்ல குணமும் அவர்களைப் பலவீனமானவர்களாக அடையாளப்படுத்தி நிற்கிறது.

இவ்வாறான அமைதியான மக்களை ஒதுக்கிவிடுவது எரிபொருள் விநியோகத்துடன் தொடர்புபட்டவர்களுக்கும் சுலபம் என்பதால், அந்தக் காரியம் மிகச் சிறப்பாக நடந்தேறுகிறது.

அதேநேரம் சண்டித்தனக் குழுக்கள் அட்டகாசம் செய்தும் செல்வாக்கைப் பயன்படுத்தியும் எரிபொருளைப் பெற்று அதனைக் கறுப்புச் சந்தையில் விற்பதைச் சமகாலத் தொழில் முயற்சியாகக் கொண்டுள்ளனர்.

இத்தகைய நிலைமையில்; ஒருபுறம் வேடன். மறுபுறம் நாகம். இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்போல அப்பாவி மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

இந்தநிலைமை எரிபொருளுக்கு மட்டுமல்ல தட்டுப்பாடான அனைத்துப் பொருட்கள் விடயத்திலும் அப்பாவி மக்களும் ஏழை மக்களும் இந்த அவலத்தைச் சந்திக்கின்றனர்.

இதற்கு எப்போதுதான் தீர்வு கிடைக்குமென்பது தெரியாததாயினும் எரிபொருளோடு மட்டும் இந்த அவலம் நின்றுவிடப் போவதில்லை என்பதுதான் இங்கு கவனத்துக்குரியது.

ஆம், இலங்கையில் மிகப்பெரிய உணவுப் பஞ்சம் ஏற்படும் என ஐ.நா சபை மிகத் தெட்டத் தெளிவாக அறிவித்துள்ளது.

எனினும் அந்த அறிவிப்பை எவரும் அபாய அறிவிப்பாகக் கருதவில்லை.

ஆனால் ஐ.நா சபை அறிவித்ததுபோல இலங்கையில் மிகப்பெரிய பஞ்சம் தலைவிரித்தாடும்.

அப்போதுதான் இலங்கை முற்றுமுழுதாக கோமாநிலைக்குச் சென்றுவிடும்.

அந்தநிலைக்கு வருகின்ற கட்டமாக, நாட்டின் ஒவ்வொரு அத்தியாவசிய செயற்பாடுகளும் செயலிழந்து வருவதை உணர முடிகிறது.

# பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர், மாணவர் வரவு குறைவு

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் வரவு குறைவாக காணப்பட்டதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக குறித்த சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்தின் தெளிவில்லாத அறிவித்தல் காரணமாக நேற்று (27.06.2022) நாட்டில் உள்ள பெருமளவான பாடசாலைகளில் ஆசிரியர், மாணவர் வரவு நிலை குறைவாகக் காணப்பட்டதோடு பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை.

01. மூன்று நாட்கள், ஐந்து நாட்கள் பாடசாலைகளை இயக்குதல் என்ற அரசாங்கத்தின் குழப்பமான அறிவித்தல்.

02. வருகைதர முடியாத ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட விடுமுறையாக கணிக்க முடியாது என்ற ஆசிரியர்களுக்குச் சாதகமான அறிவித்தல்.

03. அதிபர், ஆசிரியர்களுக்கான போக்குவரத்து வசதியின்மை.

04. சீரற்ற எரிபொருள் விநியோகம்.

05. இ.போ.ச ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு.

06. எரிசக்தி அமைச்சரின் எரிபொருள் இல்லையென்ற அபாயகரமான அறிவித்தல்.

இத்தகைய நிலைகளைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து மார்க்கங்கள் சீராகும் வரை பாடசாலை செல்வதைத் தவிர்ப்போம் என நாம் அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

அதன்படி நாட்டில் உள்ள பெருமளவான பாடசாலைகளில் போக்குவரத்து மார்க்கங்கள் இல்லாத பலர் எமது வேண்டுகோளை ஏற்று பாடசாலைக்குச் செல்லவில்லை. ஒரு சில பாடசாலை அதிபர்கள் ஆசியர்களைக் கட்டாயப்படுத்தி அழைத்த அதேவேளை மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்ததாக எமது சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், வலயச் செயலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய நிலை தொடராமல் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் சீராக, அரசாங்கம் ஆசிரியர்களுக்கான எரிபொருள் விநியோகம், போக்குவரத்து மார்க்கங்கள் என்பவற்றிற்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். இல்லையேல் ஒட்டுமொத்த பாடசாலைகளையும் நீண்ட நாட்களுக்கு மூடும்நிலை ஏற்படும்.

இவ்வாறு சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## காலைநேர மின்துண்டிப்பு இணையவழி கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும்

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

காலைநேரத்தில் மின் துண்டிப்பு மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டால் இணையவழி ஊடான பாடசாலைக் கல்வி நடவடிக்கையை மேற்கொள்வது கடினம் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

நகர பிரதேச பாடசாலைகள் இந்த வாரம் மூடப்பட்டு, கல்வி நடவடிக்கைகளை இணைய வழி முறையில் தொடர்வதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் காலை நேரங்களில் மின் துண்டிப்பு இடம்பெறாமல் இருப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கை தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## இந்திய பெற்றோலிய அமைச்சருடன் இலங்கை உயர்ஸ்தானிகர் சந்திப்பு

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்தியாவின் பெற்றோலியம், இயற்கை எரிவாயு, வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஸ்ரீ ஹர்தீப் சிங் பூரியை நேற்று சந்தித்து இருதரப்பு எரிசக்தி ஒத்துழைப்பு தொடர்பான அவசர விவகாரங்கள் குறித்து கலந்துரையாடினார்.

புதுடில்லியில் உள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

உயர்ஸ்தானிகர் மொரகொட, பெற்றோலியப்பொருட்களின் விநியோகம் தொடர்பாக இலங்கை தற்போது எதிர்நோக்கும் கடுமையான சவால்கள் மற்றும் மக்கள் படும் கடுமையான இன்னல்கள் குறித்து அமைச்சர் பூரிக்கு விளக்கமளித்தார். (ம-7)

## சிறுமி துஷ்பிரயோகம் 59 வயது நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 வயது சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த 59 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தாயார் நிகழ்வு ஒன்றுக்குச் சென்றிருந்த நேரம் பக்கத்து வீட்டு நபர் சிறுமியை அறைக்குள் அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்தார் என்று பாதிக்கப்பட்ட சிறுமி தாயிடம் தெரிவித்துள்ளார்.

தாயார் இந்த விடயம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியின் வாயைப் பொத்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்ற குறித்த நபர், சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்தார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுமி சட்ட வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-7)

## சடலங்களை அடையாளம் காண உதவுங்கள்

### யாழ்.பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத இரு ஆண்களின் சடலங்களையும் அடையாளம் கண்டு பொறுப்பேற்கும்படி யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி உறவினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 29.05.2022 அன்று பெயர், முகவரியின்றிய நிலையில் சிகிச்சைபெற்ற ஆண் ஒருவர் சிகிச்சை பலனின்றி 06.06.2022 அன்று இறந்துள்ள நிலையிலும், 22.06.2022 அன்று யாழ். கோட்டை அகழியில் கண்டெடுக்கப்பட்ட 60 வயது மதிக்கத்தக்க முதியவரின் சடலமும் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே இரு சடலங்களையும் மிக விரைவில் அடையாளம் கண்டு பொறுப்பேற்று உதவுமாறு உறவினர்களிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது என்றுள்ளது. (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 18

சோவியத் உக்ரைனிய எல்லைக்குள் ஊடுருவுவதில் OUN வெற்றி பெறாத போதும் அது ஊடுருவும் சாத்தியக்கூறுகள் குறித்து அக்கறை கொண்ட ஸ்டாலின் 1938 இல் OUN தலைவர் கொனோவலெட்ஸை படுகொலை செய்ய உத்தரவிட்டார்.

OUN உறுப்பினர் பெரும்பாலும் இளைஞர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்டிருந்தது. சில மதிப்பீடுகள் 1930 களில் கலீசியா மற்றும் வோலினில் OUN இன் உறுப்பினர் எண்ணிக்கை 20,000 ஆக இருந்ததாக குறிப்பிடப்படுகிறது. இருப்பினும், OUN இன் செல்வாக்கு அதன் உறுப்பினர்களின் அளவை விட அதிகமாக இருந்தது. ஏனெனில் இது முன்னணி உக்ரைனிய தேசியவாத அமைப்பாகவும் சுதந்திரத்திற்கான உக்ரைனிய ஆசைகளை உள்ளடக்கியதாவும் மற்றும் மேற்கத்தேய உக்ரைனியர்களின் அரசியல் அணுகுமுறைகளை வடிவமைப்பதில் முக்கிய அமைப்பாகவும் இருந்தது.

**OUN உறுப்பினர் பெரும்பாலும் இளைஞர்கள் மற்றும் மாணவர்களைக்கொண்டிருந்தது. சில மதிப்பீடுகள் 1930 களில் கலீசியா மற்றும் வோலினில் OUN இன் உறுப்பினர் எண்ணிக்கை 20,000 ஆக இருந்ததாக குறிப்பிடப்படுகிறது.**

இளம் தீவிரவாத கலீசியா மாணவர்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள பழைய இராணுவ மூத்த தலைவருக்கும் இடையிலான பதற்றங்கள் ஆரம்பத்தில் இருந்தே OUN இற்குள் இருந்தன. பழைய தலைமுறையினர் ஒரு நிலையான சமுதாயத்தில் வளர்ந்த அனுபவத்தையும், வழக்கமான படைகளில் உக்ரைனுக்காக போராடிய அனுபவத்தையும் கொண்டிருந்தனர். இளைய தலைமுறை போலந்து அடக்குமுறை மற்றும் ஒரு நிலத்தடி போராட்டத்தையும் உணர்ந் திருந்தனர்.



ஆண்ட்ரி மெல்னிக் (Andriy Atanasovich Melnyk) ஒரு உக்ரேனிய இராணுவ மற்றும் அரசியல் தலைவர்



ஸ்டீபன் பண்டேரா Stepan Bandera உக்ரேனிய தேசியவாதி

**1941 இல் OUN இரண்டு தனித்தனி பிரிவுகளாகப் பிரிந்தது. OUN-Melnyk அல்லது OUN-M, மிதவாதப் பிரிவாகவும் OUN-பண்டேரா அல்லது OUN-B, புரட்சிகரப்பிரிவாகவும் இருந்தது. உக்ரைனிய பிரதேசத்தில் இயங்கும் பெரும்பாலான OUN பணியாளர்கள் பண்டேராவின் தலைமையை ஏற்றுக்கொண்டனர்,**



OUN-M இன் சின்னம்





OUN-B இன் சின்னம்

கொனோவலெட்ஸின் படுகொலை OUN இல் வாரிசு நெருக்கடிக்கு வழிவகுத்தது. ஒகஸ்ட் 1939 இல் ரோமில் நடந்த OUN இன் 2 ஆவது பேரவை மாநாட்டில் ஆண்ட்ரி மெல்னிக் (Andriy Melnyk) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜேர்மன் படைகளால் போலந்தை ஆக்கிரமித்த பிறகு, பண்டேரா மற்றும் பிற இளம் தலைவர்கள் சிறையிலிருந்து வெளிவந்தனர், மேலும் மெல்னிக் தலைமைக்கு சவால் விடுத்தனர் மற்றும் 1929 இல் OUN ஆல் நிறுவப்பட்ட கொள்கைகளை ஆண்ட்ரி மெல்னிக் கைவிட்டதாக குற்றம் சாட்டினார்.

பெப்ரவரி 1940 களில், பண்டேரா தலைமையிலான பிரிவு புரட்சிகர தலைமையை உருவாக்கியது மற்றும் ஏப்ரல் 1941 இல் கிராகோவில் (Krakow) அவர்களது சொந்த மாநாடு நடைபெற்றது. அதில் மெல்னிக்கின் தலைமை சட்டவிரோதமானது என்று அறிவித்தது மற்றும் OUN இன் தலைவராக பண்டேராவைத் தேர்ந்தெடுத்தது. OUN இவ்வாறு இரண்டு தனித்தனி பிரிவுகளாகப் பிரிந்தது. OUN-Melnyk அல்லது OUN-M, [illegible] வாகவும், OUN-பண்டேரா அல்லது OUN-B, புரட்சிகரப் பிரிவாகவும் இருந்தது. உக்ரைனிய பிரதேசத்தில் இயங்கும் பெரும்பாலான OUN பணியாளர்கள் பண்டேராவின் தலைமையை ஏற்றுக் கொண்டனர், அதேநேரத்தில் வெளிநாட்டில் வசிக்கும் பெரும்பாலான OUN பணியாளர்கள் மெல்னிக்கிற்கு விசுவாசமாக இருந்தனர். செப்டெம்பர் 1939 இல் போலந்தின் படையெடுப்பிற்குப் பிறகு, OUN இன் இரு பிரிவுகளும் ஜேர்மனிக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையே வரவிருக்கும் போரை ஒரு சுதந்திர உக்ரைனிய அரசை நிறுவுவதற்கான வாய்ப்பாகக் கண்டன. எனவே இரு தரப்பினரும் ஜேர்மன் அதிகாரிகளுடன் ஒத்துழைத்தனர். இதற்குக் காரணம் சோவியத் ஒன்றியத்திற்கு எதிரான போரில் ஜேர்மனிக்கு சந்தேகத்திற்கு இடமின்றி உக்ரைனிய உதவி தேவைப்படும் என்பதுதான். இதற்கு கைமாற்றாக ஜேர்மனி சுதந்திரமான உக்ரைனிய அரசை ஏற்க வேண்டும் என்பதாகும். மேலும் படையெடுப்பின் வாய்ப்பைப் பயன்படுத்தி இவ்விரு குழுக்களும் தங்கள் செயற்பாட்டாளர்களை சோவியத் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு அனுப்பின. OUN-B தலைவர் ஸ்டீபன் பண்டேரா, உக்ரைனிய பணியாளர் படைகளை உருவாக்குவது தொடர்பாக ஜேர்மனியின் உளவுத்துறை தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்தினார்.

பெப்ரவரி 25, 1941 அன்று, ஜேர்மன் கட்டளையின் கீழ் "உக்ரைனிய படையணியை" உருவாக்க OUN-B அனுமதிக்கப்பட்டது. இந்த உருவாக்கம் 800 நபர்களைக் கொண்டதாக திட்டமிடப்பட்டது. எதிர்கால உக்ரைனிய இராணுவத்தின் மையமாக இது மாறும் என்று OUN-B எதிர்பார்த்தது. 1941 வசந்த காலத்தில் படையணிகள் (Legion) இரண்டு பிரிவுகளாக ஒழுங்கமைக்கப்பட்டது. ஒரு பிரிவு நாச்சிகால் படையணி (Nachtigall Battalion) என்றும், மற்றொன்று ரோலண்ட் படையணி (Roland Battalion) என்றும் அறியப்பட்டது.

**பெப்ரவரி 25, 1941 அன்று, ஜேர் மன் கட்டளையின் கீழ் "உக்ரைனிய படையணியை" உருவாக்க OUN-B அனுமதிக்கப்பட்டது. இந்த உருவாக் கம் 800 நபர்களைக் கொண்டதாக திட்டமிடப்பட்டது. எதிர்கால உக்ரைனிய இராணுவத்தின் மையமாக இது மாறும் என்று OUN-B எதிர்பார்த்தது.**

**பண்டேராவின் மக்கள் என்ற சொல் உக்ரைனிய தேசியவாதத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஸ்டீபன் பண்டேராவின் கருத்தியலை பின்பற்றுபவர்களை அழைக்கப் பயன்படுத்தப்பட்டது. இதில் உக்ரைனிய கிளர்ச்சி இராணுவ (UPA) வீரர்கள், தீவிர தேசியவாத நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் பிற உக்ரைனிய குடிமக்கள் போன்றோர் அடங்குவர்.**

பண்டேராவின் மக்கள் என்ற சொல் உக்ரைனிய தேசியவாதத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஸ்டீபன் பண்டேராவின் கருத்திலை பின்பற்றுபவர்களை அழைக்க பயன்படுத்தப்பட்டது. இதில் உக்ரைனிய கிளர்ச்சி இராணுவ (UPA) வீரர்கள், தீவிர தேசியவாத நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் பிற உக்ரைனிய குடிமக்கள் போன்றோர் அடங்குவர்.

சோவியத் ஒன்றியத்தின் மீது ஜேர்மனி படையெடுத்த எட்டு நாட்களுக்குப் பிறகு, ஜூன் 30, 1941 இல், OUN-B, லிவிவ் (Lviv) நகரில் உக்ரைனிய அரசை ஸ்தாபிப்பதாக அறிவித்தது. அவ் அரசுக்கு யாரோஸ்லாவ் ஸ்டெட்ஸ்கோ (Yaroslav Stetsko) பிரதமராக இருந்தார். ஸ்டீபன் பண்டேரா கையெழுத்திட்ட "உக்ரைனிய அரசின் பிரகடனச் சட்டம்" பதிப்புச் செய்யப்பட்டது.

இந்த அறிவிப்புக்கு பதிலளிக்கும் விதமாக, OUN-B தலைவர்களும் கூட்டாளிகளும் கெஸ்டபோவால் (Gestapo) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பல OUN-B உறுப்பினர்கள் வெளிப்படையாக கொல்லப்பட்டனர், அல்லது சிறைகளிலும் வதை முகாம்களிலும் கொல்லப்பட்டனர் (பண்டேராவின் சகோதரர்கள் இருவரும் இறுதியில் ஆஷ்விட்சில் கொலை செய்யப்பட்டனர்). செப்டெம்பர் 18, 1941 இல் பண்டேரா மற்றும் ஸ்டெட்கோ ஆகியோர் "ஜெல்லன் பாவ் பங்கர்" (Zellenbau Bunker) இல் உள்ள சச்சென்ஹவுசென் வதை முகாமுக்கு அனுப்பப்பட்டனர். பிரான்சின் முன்னாள் பிரதமர் லியோன் ப்ளூம் மற்றும் ஆஸ்திரியாவின் முன்னாள் ஜனாதிபதி கர்ட் சுஷ்னிக் போன்ற மூன்றாவது ரைச்சின் மிக முக்கியமான கைதிகளுடன் பண்டேரா சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பு- கெஸ்டபோ (Gestapo) என்பது நாஜி ஜேர்மனி மற்றும் நாஜி ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவில் இருந்த உத்தியோகபூர்வ இரகசிய பொலிஸ் ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழில் எரிபொரு...

அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

நாடு முழுவதும் எரிபொருள் விநியோக ஒழுங்குபடுத்தும் பணிகளில் முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து இராணுவத்தினர் இப்பணிகளை முன்னெடுக்கவுள்ளனர்.

மாவட்டத்தில் அறிமுகமாகியுள்ள எரிபொருள் பங்கீட்டு அட்டை நடைமுறையை மேற்பார்வை செய்யும் பணியை இராணுவத்தினர் முன்னெடுக்கவுள்ளனர்.

இதன்படி மக்கள் பங்கீட்டு அட்டையில் தாம் தெரிவு செய்யும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுமே எரிபொருளை பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், பிரதேச செயலாளர்கள், இராணுவ, கடற்படை அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-7,33)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1277
வெற்றி இலக்கங்கள்
துலாம் 4 5 4 0 5 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.27 சீட்டிழுப்பு இலக்கம் 3041
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 44 46 48 57
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1147
வெற்றி எழுத்து M சுப்பர் இலக்கம் 12 வெற்றி இலக்கங்கள் 06 42 54 58

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.27
சீட்டிழுப்பு இலக்கம் 108
வெற்றி இலக்கங்கள் விருச்சிகம் 06 29 34 47 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/27
சீட்டிழுப்பு இலக்கம் 4799
ஆங்கில எழுத்து G வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 7 8 9 7 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.06.27
சீட்டிழுப்பு இலக்கம் - 829
S 11 35 51 60
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
NATIONAL LOTTERIES BOARD

## எரிபொருள் நிர...

நிறுத்தப்பட்டிருந்தது.

திடீரென சிலருக்கு எரிபொருள் வழங்கப்பட்டதை அவதானித்ததாகத் தெரிவித்து அங்கு திரண்ட மக்கள் தமக்கும் எரிபொருள் வழங்கவேண்டும் என வலியுறுத்தினர்.

பருத்தித்துறை கிராமக்கோட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் பகிர்ந்தளிக்குமாறு பிரதேச செயலர் கடிதம் வழங்கிய பின்னரேயே உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தை அடுத்து அங்கு திரண்ட மக்கள் தமக்கும் எரிபொருள் வழங்க வேண்டும் எனக்கோரி எதிர்ப்பு வெளியிட்டனர். (ம-7)

## பாடசாலை விடு...

கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் தீர்மானத்தின்படி பாடசாலைகள் நடத்துவது தொடர்பில் முடிவுகள் எடுக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கையிருப்பில்...

செய்து விநியோகித்து வரும் பிரதான நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று காலை கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நிதியைப் பயன்படுத்தி எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தை சீரமைக்க மத்திய வங்கி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து நிதி வழங்கவும், கடன் கடிதத்தின்படி எரிபொருள் கிடைக்காவிட்டால் குறிப்பிட்ட காலத்திற்குள் எரிபொருளைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தாய் நிறுவனங்களுடன் கலந்துரையாடவும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த சில மாதங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை நிர்வகிப்பதற்கும் பராமரிப்பதற்கும் முறையான திட்டமொன்றை வகுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## எரிபொருளை...

பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டிற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுக்கும் வகையில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இவ்வாறு கட்டார் பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## எரிபொருள்...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதாரம், பாதுகாப்பு, மின்சாரம் மற்றும் ஏற்றுமதி துறைகளுக்கும் மட்டுமே

எரிபொருள் விநியோகிக்கப்படும்

இந்த காலப்பகுதியில் தனியார் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் விநியோகம் இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும், இதன்படி அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## நாடு சுயமாகவே...

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தவிர, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தற்போது ஓட்டோ டீசல், சுப்பர் டீசல் மற்றும் 92 ஒக்டேன் பெற்றோல் இருப்புக்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

டொலர் தட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழில்முறையற்ற நிர்வாகமும் நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய எரிபொருள் நெருக்கடிக்கு நேரடிக் காரணம் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உரிய நேரத்தில் தீர்மானங்களை எடுக்காத காரணத்தினால் வேண்டுமென்றே நிலைமை மோசமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ம-7)

## தொட...

ஜனாதிபதி கோட்டாவிடம் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மற்றும் திறைசேரி திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட அதிகாரிகள் குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று சந்தித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங், ஆசியாவுக்கான பிரதி உதவித் திறைசேரிச் செயலாளர் ரொபேர்ட் கப்ரோத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலாளரான கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கை

யின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடினர்.

இந்நிலையில், இந்த சந்திப்பு குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள ஜூலி சுங், 'இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து விவாதிக்க இது ஒரு சவாலான நேரம். இலங்கைக்கு வளமான, பாதுகாப்பான மற்றும் ஜனநாயக எதிர்காலத்தை அடைய உதவும் வகையில் நாங்கள் தொடர்ந்து உதவி மற்றும் நீண்ட கால பங்காளித்துவத்தை வழங்குகிறோம்' என பதிவிட்டுள்ளார். (ம-7)

## மின் கட்டணத்தை...

பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க, நுகர்வோருக்கு சலுகையாக கட்டண உயர்வு 57% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது என இதன்போது வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## புகையிரத...

தெரிவித்துள்ளது.

புகையிரத சேவைகளை முன்னெடுப்பதற்கு எரிபொருள் விநியோகம் தொடர்பான கட்டுப்பாட்டினால் எவ்வித தாக்கமும் ஏற்படாது என அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1600
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.06.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,305,740/-
வெற்றி இலக்கங்கள் 11 14 37 51 ஆங்கில எழுத்து U

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.06.27
சீட்டிழுப்பு இல: 3935
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,004,740/-
வெற்றி இலக்கங்கள் 10 53 64 73 ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,814,315.40
திகதி 2022-06-27
வெற்றி வாரம் 3486
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 02 12 34 50 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,230,080/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 27 20 27 41 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 950
வர்ணம் இள நீலம்
திகதி 2022.06.27 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 245,017,759/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1774 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.06.27 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் J 04 43 56 70
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,324,100/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி

## சிவநேசன் சோதிமலர்

(மாமனிதர் சிவநேசன் அறக்கட்டளை நிறுவுனர்)

**திதி நிர்ணயம்**

சுப கிருது வருடம் நிகழும் வைகாசியில்
சார்திதி பூர்வ பட்ஷ துதியை தன்னில்
நேர்மையிலும் மேன்மையுடன் நிறைவாகி சோதிமலர்.
இந்நாநிலத்தில் வாழ்ந்தகன்று இறைபதமுற்றாள் இயம்பு.

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வைகாசி (31.05.2022) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி சி.சோதிமலர் அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து இக்கட்டான காலச்சூழலில் இறுதிக்கிரியைகளுக்கான சகல ஒழுங்குகளை மேற்கொள்ள உதவிகள் வழங்கிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எம் குடும்பத்தலைவி நோயுற்றபோது சகல விதத்திலும் உதவிய வைத்திய கலாநிதிகளான கிரிதரன், பேரானந்தராஜா, பிரம்மா, சிவராமன், ஜீவகன், பவித்திரா, மதிவாணன், பேராசிரியர் செரீப் மற்றும் ஏனைய யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் மந்திகை ஆதார வைத்தியசாலை குருதி சுத்திகரிப்பு நிலைய வைத்திய கலாநிதி கிரியுகன், ரஞ்சினி, தாதியர் லவன்ஜித் மற்றும் சக உத்தியோகத்தர்களுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், செயலாளர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, மேலும் இறுதிநிகழ்வில் கலந்துகொண்டு நேரடியாக எமக்கு ஆறுதல் தெரிவித்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் தலைவர்கள் மற்றும் வட மாகாண பனை, தென்னைவள கூட்டுறவு நிறுவன சங்கங்களினதும் பேரிணையத்தினதும் அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வைத்திய கலாநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் (Mathavam center for neuro developmental disorder), மற்றும் பேச்சு மொழியியல் சிகிச்சையாளர்கள், களனி பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், பொறியியல்பீட பழைய மாணவர்கள் (பேராதனை பல்கலைக்கழகம்) மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் - (கரவெட்டி பிரதேச செயலகம்) ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் (வடமராட்சி வலயம்) ஆகியோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரதிகள் வழங்கிய - யா/கரவெட்டி அ.த.க பாடசாலை சமூகம், வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.கூட்டுறவுச் சங்க பணியாளர்கள், மாதர்சங்கம் கரவெட்டி கிழக்கு, மாவடி சங்கம், கரவெட்டி கிழக்கு, வீரபுத்திரன் குடும்பத்தினர் மற்றும் தொலைபேசி ஊடாகவும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் தொடர்புகொண்டு எம்முடன் துயர்பகிர்ந்து கொண்ட புலம்பெயர் தேசத்தின் உறவினர்கள்,நண்பர்கள், தமிழ் தேசிய அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் கட்டேரா (KATERRA KSA) நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பப்பிரிவு முகாமையாளர்கள், பொறியியலாளர்கள், பெங்களூர் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பழைய மாணவர்கள், அழகப்பா பல்கலைக்கழக மெட்றாஸ் கல்வி நிறுவனத்தின் பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் (யா/ஹாட்லிக் கல்லூரி, யா/ஞானாசாரியார் கல்லூரி, யா/யோகோபுரம் மகா வித்தியாலயம், யா/யார்கரு விநாயகர் வித்தியாலயம்), நண்பர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் (தமிழ் நாடு, தென்னிந்திய, வடஇந்திய, நேபாள், கொரியா) ஊடக துறைசார் நண்பர்கள், நிவர்த்திகா அழகுக்கலை நிலைய பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் யாருக்கும் நன்றி தெரிவிக்க தவறியிருந்தால் அவர்களுக்கும் எமது நன்றிகள்...!

கரவெட்டி, கிழக்கு கரவெட்டி. (C-4550) குடும்பத்தினர்

## நிதி முகாமைத்துவத்துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா இணக்கம்

(கொழும்பு)

இலங்கையில் நிதி முகாமைத்துவத்திற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கெல்லி கெய்டர்லிங் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜதந்திர குழுவும் தெரிவித்துள்ளது.

ரொபர்ட் கப்ரோத், அமெரிக்காவிலுள்ள ஆசிய கருவூலத்தின் துணைச் செயலர் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் கலந்துகொண்டார்.

மேலும், பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். சமரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-7)

## பதில் கல்வி அமைச்சராக பந்துல நியமனம்

(கொழும்பு)

போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பதில் கல்வி அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளதால் பந்துல குணவர்தன ஜனாதிபதியால் பதில் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன 2005ஆம்ஆண்டுமுதல் 2010ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கல்வி அமைச்சராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரனவை அவரது காரில் வைத்து போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அமைச்சு வளாகத்திற்கு வருகை தந்த சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் குழுவினால் அவர் தடுத்து வைக்கப்பட்டதாக தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவித்தன. (ம-7)


**Room**
அறைகள் வாடகைக்கு
வைத்திய தேவைகளுக்கு 800/= இருந்து
தொடர்பு:
072 361 9751
யாழ்ப்பாணம் (12007)

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. வீட்டை வாடகைக்கு வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: இ
077 745 1625

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12001)
076 825 7716 (ஆகாஸ்)

**ஆடுகள் விற்பனைக்கு**
எமது பண்ணையில் வளர்க்கப்பட்ட 46 மறி ஆடுகளும் 18 கிடாய் ஆடுகளும் (இரண்டு மிகப்பெரிய கிடாய்கள் உட்பட) உடன் விற்பனைக்கு உண்டு.
மொத்தமாகக் கொள்வனவு செய்யும் ஆர்வமும் திறனும் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் (இடம் - கெற்பெலி, உசன்) (12006)
தொடர்புக்கு:- 077 116 7585

**உடனடி பயிற்சியுடன் வேலை வாய்ப்பு**
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-4121)
V2 TRAVELS
● பயிற்சிக்கால கைக்கத்தொகை -20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-
49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4121)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி வழங்கி உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.